கொள்முதல் செய்யவில்லை. தொடர்ந்து அது தேவைப்படாது என்பதைக் கருத்திலே கொண்டு அதை வாங்காமல் நிறுத்தியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், பல சட்டமன்ற உறுப்பினர்களும், தொடர் பேருந்துகள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். புதிய பேருந்துகளை விரைவில் வாங்கி, உங்களுடைய பகுதிக்கு வருவதற்கு எப்படியும் மூன்று, நான்கு மாதங்கள் ஆகும். எனவே, அதுகுறித்துப் பரிசீலித்து, நிச்சயமாக அந்தத் தொடர் பேருந்துகள் விடுவதற்கான முயற்சி எடுக்கப்படும்.

முற்பகல் *9–45*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

93—

எம்.ஆர்.ஐ. ஸ்கேன் பிரிவு

***11239—திரு. கோ. ஐயப்பன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் பிரிவு அமைத்துத் தர, அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் படிப்படியாக வழங்கப்பட்டு வருகிறது. 500 படுக்கைகள் கொண்ட ஈரோடு மாவட்டத் தலைமை மருத்துவமனைக்கு மட்டும் தற்போது எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடலூர் அரசுத் தலைமை மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோ. ஐயப்பன்.

திரு. கோ. ஐயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் அரசுத் தலைமை மருத்துவமனையினைப் பொறுத்தவரையில்

2009 ஜூலை 8]

500 படுக்கைகளுக்கு மேலாக உள்ள மருத்துவமனையாக உள்ளது. மேலும், 100 ஆண்டுகள் நிறைவடைந்த சிறப்புடைய மருத்துவமனையாகவும் அம்மருத்துவமனை உள்ளது. கடலூர் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகவும் உள்ளது. அதேபோல, வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழுகின்ற மக்கள் அங்கு அதிக அளவில் இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 100-வது ஆண்டினை நினைவில்கொள்கிறவகையில், கடலூர் அரசு மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வழங்கிட உதவி செய்யவேண்டுமாய் தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.ஆர்.ஐ. ஸ்கேன்—ஐப் பொறுத்தவரையில், அனைத்து மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் அமைக்க வேண்டுமென்று கொள்கை முடிவு இருக்கிறது. முதற்கட்டமாக, இப்போது ஈரோடு தலைமை மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வழங்கப்பட்டு, அது தொடங்கப்படவிருக்கிறது. மேலும், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வழங்குவதைப் பொறுத்தவரையில், எந்தத் தலைமை மருத்துவமனைக்கு முக்கியமாகத் தேவைப்படுகிறதோ அதற்கேற்பவும், நிதிநிலைக்கு உட்பட்டும் அனைத்து மாவட்டங்களிலும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் படிப்படியாகத்தான் வழங்கிட முடியும்.

திரு. கோ. ஐயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதாலும், மருத்துவமனையின் 100—வது ஆண்டினை நினைவில்கொள்கின்ற வகையிலும், மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய சொந்த மாவட்டமாகவும் இருப்பதால், முன்னுரிமை அடிப்படையிலே அருள்கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமை மருத்துவமனைக்கு இந்த ஆண்டே எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வழங்கிட உதவி செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். மேலும், அங்கு பட்டாசு தயாரிக்கின்ற தொழிற்சாலைகளில் திடீரென்று தீ விபத்துகள் ஏற்படுகின்ற காரணத்தினால், அங்கு இருக்கின்ற ஏழை மக்கள் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக, தனியார் அல்லது பக்கத்து மாநிலமான புதுச்சேரி அரசு மருத்துவமனைக்குச் சென்றுதான் சிகிச்சை பெறவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதையும் கருத்தில்கொண்டு ஏழையெளிய

மக்கள் பயனடைகின்றவகையில், உடனடியாக தீ விபத்துக்களுக்குச் சிகிச்சை பெறுகின்றவிதமாக, கடலூர் அரசுத் தலைமை மருத்துவமனையில் தீப்புண் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்திட, ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், அதே மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருக்கின்ற காரணத்தால், மற்ற உறுப்பினர்கள் எல்லாம் அவருடைய மாவட்டத்திற்கு முதலிடம் கொடுத்துவிட்டார் என்ற ஒரு குற்றச்சாட்டு சொல்கிற நிலை வருமே என்று அஞ்சுகிறார். இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி, கடலூர் மாவட்டத்திற்கு முதலிலே எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வாங்கித் தருவதற்கு இந்த அரசு முயற்சிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.ஆர்.ஐ. ஸ்கேன், சி.டி. ஸ்கேன் போன்ற நவீன சாதனங்கள் மருத்துவ சிகிச்சைக்கு மிகவும் அவசியமாக இருக்கின்ற சூழ்நிலையில், பொதுமக்களிடமிருந்து இந்த ஸ்கேனுக்காகத் தனியார் நிறுவனங்கள் மிகவும் அதிகமான கட்டணங்களை வசூலிப்பதாகவும், அந்த ஸ்கேனுக்குப் பரிந்துரை செய்கின்ற டாக்டர்களுக்கு அதில் 50 விழுக்காடு வரை referral charges அல்லது gold coin போன்ற பரிசுகள் எல்லாம் அளிக்கப்படுவதாகவும் மருத்துவர்களே புகார் செய்திருக்கிறார்கள். சில மருத்துவர்களுடைய இந்தப் பேராசையான நடவடிக்கையிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றுகின்றவகையில், அரசே இதற்கான கட்டணத்தை எம்.ஆர்.ஐ. ஸ்கேன் 64 slice scan என்றால், அதற்கு இவ்வளவு கட்டணம் என்றும், 128 slice scan என்றால், அதற்கு இவ்வளவு கட்டணம் என்றும், சி.டி. ஸ்கேன் என்றால், அதற்கு இவ்வளவு கட்டணம் என்றும் அரசே அதற்கான கட்டணத்தை நிர்ணயித்து அதனை அறிவிக்க முன்வருமா என்றும் அந்தக் கட்டணத்தைவிட அதிகமாக வாங்குகின்ற டாக்டர்கள்மீதோ அல்லது ஸ்கேன் நிறுவனங்களின்மீதோ, அரசு நடவடிக்கை எடுப்பதற்கு முன்வந்து, பொதுமக்களைக் காப்பாற்ற முன்வருமா என்பதையும் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

2009 ஜூலை 8]

முற்பகல் 9–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய சட்டமன்றக் கொறடா அவர்கள், ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அது பரிசீலிக்கப்பட வேண்டியதுதான். இருந்தாலும், M.R.I. Scan கருவியின் விலை, அதிகமாக இருக்கின்ற காரணத்தால், இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. அரசு மருத்துவமனைகள்— சென்னை தலைமை அரசு மருத்துவமனையில் MRI Scan ஆரம்பிக்கப்பட்டபொழுது இருந்த கட்டணத்தை இப்பொழுது ரூ.2,500/– ஆகக் குறைத்துள்ளோம். இப்பொழுது வெளி மார்க்கெட்டிலும் அதனுடைய கட்டணம் குறைந்துவிட்டது. ரூ.10,000/–, ரூ.12,000/–ஆக M.R.I. Scan–னுடைய கட்டணம் இருந்தது, இப்பொழுது ரூ.3,000/–, ரூ.2,000/–ஆகக் குறைந்துவிட்டதற்குக் காரணம், அரசு மருத்துவமனைகளில் ரூ.2,500/–ஆகக் கட்டணத்தைக் குறைத்ததுதான். வெளியிலேயும் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்றோம்.

அதைப்போலவே, மருத்துவர்கள் எல்லாம் ஒரு understanding–ல் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள், அது தீவிரமாகக் கவனிக்கப்படும் என்பதையும் மருத்துவர்களுக்கு எச்சரிக்கையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தினுடைய அரசுத் தலைமை மருத்துவனை, 100 ஆண்டுகள் பழைமை வாய்ந்த மருத்துவமனையாகும். நெல்லிக்குப்பத்தில் நடந்த அரசு விழாவிலே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், அப்பொழுது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்தபொழுது, ‘வரும் ஆண்டு நிச்சயமாக கடலூர் மருத்துவனையை மருத்துவக் கல்லூரியாகத் தரம் உயர்த்துவேன்” என்று ஒரு அறிவிப்பை வெளியிட்டார்கள். மாவட்டத்தினுடைய அமைச்சர் என்ற வகையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கின்ற தாங்கள், மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற அடிப்படையில், தங்கள் மாவட்டத்திற்கு

முன்னுரிமை தந்து இந்த ஆண்டு ஒரு மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பீர்களா? ஏற்கெனவே கேப்பர்கோரில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் அறிவிப்பு மட்டும்தான் செய்தாக வேண்டும், 500 படுக்கை வசதிகள் இருக்கின்றன. அதனை அறிவிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: M.R.I. Scan–ஐக் கேட்டுவிட்டு, மருத்துவக் கல்லூரியில் போய் நிற்கிறீர்கள்; Irrelevant–ஆகக் கேட்காதீர்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், M.R.I. Scan–ஐத் தன்னுடைய சொந்த மாவட்டத்திற்குக் கொடுத்துவிட்டார் என்ற ஒரு கெட்ட பெயர் எனக்கு வந்துவிடக் கூடாது என்று அவரே சொல்லிவிட்டார். ஆகவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்று, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தெரிவித்து, அவர்மூலமாக அந்த மாவட்டத்திற்கு சிபாரிசு செய்தால் அது சரியாக இருக்கும். சொந்த மாவட்டத்திற்கு சிபாரிசு செய்தால், நாளைக்குச் சொல்வார்கள்: Transport Minister அவர்களேகூட, தன்னுடைய மாவட்டத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விட்டார் என்று சொல்வார்கள். சொந்த மாவட்டமாக இருந்தாலும், முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்ற ஆசை இருக்கிறது. ஆனால், நிதி நிலைமை இப்போது இல்லை. ஏனென்றால், இப்பொழுது உயிர்காக்கும் Insurance திட்டத்திற்கு அதிகமான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிற காரணத்தால், இந்த ஆண்டு புதிய மருத்துவக் கல்லூரி துவக்கப்படாது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 5 புதிய மருத்துவக் கல்லூரிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், இந்தியாவிலேயே, தமிழக அரசுதான் அதிகமான மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கியிருக்கின்றது. அதனால்தான் அதிகமான மாணவர்கள் இங்கே படித்துக்கொண்டிருக்கிறார்கள். அதிகமான உதவி செய்வதும் தமிழ்நாடுதான். மாணவர்களுக்கு வழங்கப்படும் stipend–ஐ இப்பொழுது ரூ.4,500/–லிருந்து ரூ.6,000/– ஆக மாண்புமிகு முதல்வர்

அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள். இது பாராட்டக்கூடிய ஒரு விஷயமாகும். இங்கேயிருக்கின்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இதனைப் பாராட்ட வேண்டும். மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள், மாணவர்களின் போாரட்டத்திற்கு முன்பாகவே stipend–ஐ உயர்த்தியிருக்கிறார்கள். தனியார் மருத்துவக் கல்லூரிகளில் எல்லாம் ரூ.1,000/– ரூ.2,000/–தான் stipend ஆகக் கொடுக்கிறார்கள். இதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அனைத்து மாவட்டங்களிலும் புதிய மருத்துவக் கல்லூரிகள் துவக்கப்பட வேண்டுமென்ற கருத்துரு, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தற்போது நடந்துகொண்டிருக்கும் பொற்கால ஆட்சியில், கருவறையிலிருந்து, கல்லறை வரையிலேயும், யாரையும் விட்டு விடாமல், நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், மிகச் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். தமிழகத்தில் பணியாற்றிவரும் அரசு டாக்டர்கள் விஷயத்திலும் மீண்டும் ஒருமுறை அவர் இதை நிரூபித்துள்ளார் என்பதை யாரும் மறுக்க முடியாது. மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின்போது, தமிழகத்தில் அரசு மருத்துவர்களுக்கு, மத்திய அரசு அறிவித்துள்ள 6–வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின்படி, மத்திய அரசு மருத்துவர்களுக்குக் கிடைக்கும் ஊதிய விகிதமும் மற்றும் dynamic assured . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, not related to the main question. Please sit down. (குறுக்கீடு) No.

வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.